[1981 மார்ச் 23

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, ஊழல் நடந்ததா இல்லையா என்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் தனியாக விசாரித்துப் பதில் சொல்ல முடியும்.

தீ விபத்தில் வீடிழந்தவர்களுக்கு அரசு உதவி.

*வினா எண். 435 : திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீ விபத்தில் வீடு இழந்தவர்களுக்கு அரசு அளிக்கும் உதவிகள் 10 ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துபவர்களுக்கு இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அவ்விதியைத் திருத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் நிலவரி செலுத்துவது ரூபாய் பத்தும் அதற்கும் குறைவாக இருந்தால் அரசு எல்லாவிதமான உதவிகளையும் செய்கிறது. சிலயிடங்களில் பத்து ரூபாய்க்கும் அதிகமாக இருந்தாலும் அங்கேயிருக்கின்ற நிலைமைக்கேற்றவாறு இடத்திற்கேற்றவாறு நஷ்டத்திற்கேற்றவாறு அந்த விதியைத் தளர்த்தி அவர்களுக்கு உதவி செய்வதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 'கேர்' நிறுவன உதவியுடன் சுகாதார கல்வித்திட்டம்

* வினா எண். 436 : திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தில் கேர் நிறுவன உதவியுடன் சுகாதார கல்வித்திட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS